செய்தி வெளியீடு எண். 82-2017 நாள்: 28.10.2017

# விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தொடங்கி வைத்து, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார்.

*****

விழுப்புரம் திரு.காமராஜ் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெரும் வகையில் நடத்திய மாபெரும் வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (28.10.2017) தொடங்கி வைத்து, தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில், சுமார் 3,535 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கி விழாப்பேருரையாற்றினார்.

மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு இளைஞர் நலனில் அக்கறையுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு முக்கிய திட்டமான, அரசுடன் தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் இணைந்து இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, இளைஞர்களில் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அரசின் குறிக்கோளாகும். இன்றைய தினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் தமிழகத்தைச் சேர்ந்த 122 முன்னனி தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டது. 54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 11,252 வேலை நாடுநர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமின் மூலமாக 21 மாற்றுத்திறனாளிகள் உட்பட 3,535 இளைஞர்களுக்கு வேலை கிடைத்துள்ளது. 5,621 நபர்கள் இரண்டாம் நிலை தேர்வுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 143 எண்ணிக்கையிலான நபர்கள் திறன் பயிற்சி பெறுவதற்காக பதிவு செய்துள்ளனர். மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் இந்த வேலைவாய்ப்பு முகாம் என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். இளைஞர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பு தொடர்பான பயிற்சி அரங்கமும் இம்முகாமில் அமைக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு பெறமுடியாமல் இருப்பவர்களுக்கு, ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி, அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கக் கூடிய வகையில்

ஒரு கன்னியமான வாழ்க்கை அமைத்துத்தர வேண்டி நடத்தப்பட்ட இந்த வேலைவாய்ப்பு முகாமினை அமைத்த அனைத்து நிறுவனங்களுக்கும், மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, மகளிர் திட்ட இயக்குநர் திரு.சுந்தரராஜன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சரஸ்வதி, விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை திருச்சி மண்டல இணை இயக்குநர் திருமதி.அனிதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் திரு.மணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.